# எங்கள் கலிய மூர்த்தி!

கழுவும் மீனில் நழுவும் மீனாய்
காலம் கடத்தும் எங்கள் நண்பர்
கலிய மூர்த்தி எந்நாளும் வாழியவே!
எளிதாய் ஒன்றைப் பொதுவில் சொல்ல,

இடைமறித்து குழப்பம் செய்து அதன்
உண்மைதன்மை உணரா நிலையை
உவந்து செய்யும் இனிய நண்பர்,
கலியனை அன்றி யார்தான் உண்டு?

கனிவாய் பொறுப்பை அவரிடம் வைத்தால்
காலனைப் போலே அறத்தைப் பேசி,
இயலாதென்பனை இடையில் செருகி,
அயலார் செய்தல் அறமே என்பார்.

புயலோ மழையோ பேரின்ப நிலையோ
இயலாய் இடையில் இருந்தே நகர்ந்து,
இருப்பைக் காட்டி நிறைந்து கொள்வார்!
இனிய நண்பர் செயல் என்றும் இனிதே!

அன்புடன்,

கு.ப. அசோகன் (24-09-2025)